(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 369.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2014 யூன் 17, செவ்வாய்க்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2620/ '12

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் தொழிலின்மை வீதம் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) இத் தொழிலின்மைப் பிரச்சினைக்கு வழங்கப்படும் தீர்வுகள் யாவை என்பதையும்;

(iii) இத் தீர்வுகளினூடாக அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற இலக்குகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி இலக்குகளை அடைந்துகொள்வதற்குத் தேவைப்படும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3148/ '12

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2009, 2010, 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பெற்றுள்ள கடன்களின் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) நிகர ஒதுக்குகள் வெகுவாக அதிகரித்துள்ளதாக அரசாங்கம் கூறுவதன் பிரகாரம் மேற்படி ஆண்டுகளில் ஒதுக்குகளின் அதிகரிப்பின் அளவு யாதென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இற்றைவரைக்கும் ஒதுக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ள நீண்டகாலக் கடன்களின் தொகை என்னவென்பதையும்;

(ii) கடந்த மூன்று வருடங்களில் இறக்குமதிகளின் விகிதமாக ஒதுக்குகளின் தொகை ஆண்டு அடிப்படையில் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) கூறப்படுவது போன்று ஒதுக்குகளின் நிலை சாதகமானதல்ல என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3452/ '13

3\.

கௌரவ பி. ஹரிசன்,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2012ஆம் ஆண்டில் பயிர்ச்செய்கை அழிவுக்குள்ளான வட மத்திய மாகாண விவசாயிகளில் பயிர்ச் செய்கைக் கடனைப் பெற்றுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி விவசாயிகள் பயிர்ச் செய்கைக் கடன்களைப் பெற்றுள்ள வங்கிகள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் யாவை;

(iii) மேற்படி பயிர்ச் செய்கைக் கடன்களுக்கான வட்டியில் பதிவழிக்கப்பட்ட பணத்தொகை யாது;

(iv) அவ்வாறு பதிவழிக்கப்பட்ட வட்டியானது ஒவ்வொரு வங்கிக்கும் நிறுவனத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3649/ '13

4\.

கௌரவ புத்திக பதிரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பஸ்கொட பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் வயற் காணிகள் மீட்கப்படுவதாக பொதுமக்கள் குற்றஞ் சாட்டுவதை அறிவாரா என்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை மேற்படி பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் அனுமதியின்றி மீட்கப்பட்டுள்ள வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி அனுமதியற்ற காணி மீட்புகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) இதற்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை பஸ்கொட பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் வயற் காணிகளை மீட்பதற்கு சட்ட ரீதியாக அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மீட்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வயற் காணிகளை மீட்பதற்கு அனுமதி வழங்கியமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3717/ '13

5.

கௌரவ அனுர திசாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை காப்புறுதிக் கம்பனி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகிய நிறுவனங்கள் கடந்த 03 வருட காலப்பகுதிக்குள் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி மற்றும் இணையத்தள அறிவித்தல்களுக்காக செலவிட்டுள்ள பணத் தொகைகள் ஆண்டு ரீதியாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்கள் அறிவித்தல்களை வழங்கியுள்ள ஊடக நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்கள், கடந்த 03 வருட காலப்பகுதியில் ஒவ்வொரு ஊடக நிறுவனத்திற்கும் வழங்கியுள்ள அறிவித்தல்களின் பெறுமதி ஆண்டு ரீதியாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3733/ '13

6.

கௌரவ ரன்ஜன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலலோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சவுதி அரேபியாவில் சிரச்சேத தண்டனைக்கு உள்ளாகி உயிரிழந்த முத்தூரைச் சேர்ந்த, பராயமெய்தாத ரிஸானா நபீக் எனும் பாடசாலை மாணவியை ஏமாற்றி போலி விமானக் கடவுச் சீட்டு உள்ளிட்ட ஆவணங்களைத் தயாரித்து வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்த குற்றம் காரணமாக பதிவு இரத்துச்செய்யப்பட்ட "ஓமார் ரெவல்ஸ்" எனப்படும் தொழில் முகவர் நிலையம் மீண்டும் "ஓமல்கா ரெவல்ஸ்" என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதை அறிவாரா;

(ii) கறைநிரல் பட்டியலில் சேர்க்கப்பட்ட "ஓமார் ரெவல்ஸ்" முகவர் நிலையத்தை அதே பணிப்பாளர் சபையின் கீழ் வேறொரு பெயரில் பதிவு செய்வதற்கு அனுமதி வழங்கியமைக்கான காரணங்கள் யாவை;

(iii) இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் காரணமாக மோசடி முகவர்கள் மென்மேலும் குற்றங்களைப் புரியத் தூண்டப்படுகின்றனர் என்பதையும், போலியான ஆவணங்களைத் தயாரிக்க அச்சப்படுவதில்லை என்பதையும் அவர் ஏற்றுக்கொள்வாரா;

(iv) ஆமெனில், இந்நிலைமையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4334/'13

7\.

கௌரவ (திருமதி) அனோமா கமகே, - கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது தேசிய பாடசாலைகளில் அதிபர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அதிபர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்ற மேற்படி பாடசாலைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக அண்மையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

(v) மேற்படி விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் தெரிவு செய்யப்பட்ட அதிபர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தேசிய பாடசாலையொன்றில் அதிபர் பதவியை வகிப்பதற்கு காணப்பட வேண்டிய கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்;

(ii) தற்போது சேவையாற்றுகின்ற தேசிய பாடசாலை அதிபர்கள் மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார்களா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4486/13

8\.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— கடற்றொழில் நீரகவளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வருடாந்தம் சிலாபம் கழிமுகத்தில் இயற்கையாக மணல் நிரம்புவதன் காரணமாக அப் பிரதேச மீனவர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றார்கள் என்பதையும்;

(ii) கழிமுகத்தில் மணல் நிரம்புவதால் ஏற்கனவே படகுகளை கடலில் செலுத்தும்போது ஏற்படும் விபத்துகளால் பல உயிரிழப்புகளும் படகுகள் அழிவுறுதலும் இடம்பெற்றுள்ளன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) சிலாபம் கழிமுகத்தை அபிவிருத்தி செய்வதற்காக தற்போது ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா;

(ii) சிலாபம் கழிமுகத்தில் மணல் நிரம்புதல் தொடர்பில் தகுந்த பரிசோதனையொன்றை மேற்கொண்டு இது தொடர்பாக நிரந்தர தீர்வொன்றை வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

(iii) ஆமெனில், அதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(iv) அத்தகைய நடவடிக்கைகள் மூலம் குறிப்பிட்ட கழிமுகத்தை அபிவிருத்தி செய்ய எவ்வளவு காலம் செல்லும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4570/ '13

9.

கௌரவ துனேஷ் கன்கந்த,— சமூக சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கில் குறிப்பிட்டுள்ளவாறு 60 வயதை தாண்டுகின்ற ஒவ்வொருவருக்கும் ஓய்வூதியம் வழங்கும் திட்டமொன்று அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) தற்போது மேற்படி ஓய்வூதியம் வழங்கப்படும் 60 வயதை தாண்டிய ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்:

(iii) மேற்படி திட்டத்தின் மூலம் ஒருவருக்கு மாதாந்தம் கிடைக்கும் ஓய்வூதியத் தொகை எவ்வளவென்பதையும்:

(iv) 60 வயதை தாண்டிய ஒவ்வொருவருக்கும் மேற்படி ஓய்வூதியம் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010 ஆம் ஆண்டு யூலை மாதத்திலிருந்து அறிமுகப்படுத்துவதற்கு உத்தேசமாயிருந்த மேலே குறிப்பிடப்பட்ட ஓய்வூதியத் திட்டம் இற்றைவரை ஆரம்பிக்கப்படவில்லை எனில், குறித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4748/ '14

10.

கௌரவ அஷோக் அபேசிங்க,— கைத்தொழில், வாணிப அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) நாட்டிலுள்ள பதிவு செய்யப்பட்ட வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி தொழில்முயற்சிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனின், மேற்படி வகைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ள முறை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) குருநாகல் மாவட்டத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி தொழில்முயற்சிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2621/ '12

11.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் கிழக்கின் உதயம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இந் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு

(i) பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) விடய அடிப்படையில் செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்காக இந் நிகழ்ச்சித் திட்டங்கள் போதுமானதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3230/ '12

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை மின்சார சபை தொடர்பாக,

(i) 2012 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரைக்குமான இலாபம் அல்லது நட்டத்தையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுகளுக்கான எதிர்பார்க்கப்படும் இலாபம் அல்லது நட்டத்தையும்;

(iii) இன்றுள்ளவாறான மூலதனம் மற்றும் ஒதுக்கங்களையும்;

(iv) நிறுவனத்தில் வேலை செய்யும் ஆட்களின் எண்ணிக்கையையும்;

(v) பணியாளர்களின் எண்ணிக்கை வேலைக்கு அதிகமாகவா அல்லது குறைவாகவா உள்ளதா என்பதையும்;

(vi) ஒரு பணியாளருக்கான செலவினம் மற்றும் ஒரு பணியாளருக்கான இலாபத்தையும்;

(vii) இன்றுள்ளவாறாக வங்கி மேலதிகப் பற்றுடன் குறுங்காலக் கடன்கள் அத்துடன் இடைக்கால மற்றும் நீண்டகால கடன்களின் மொத்தத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3650/'13

13.

கௌரவ புத்திக பதிரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெலிகம பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் வயற் காணிகள் மீட்கப்படுவதாக பொதுமக்கள் குற்றஞ் சாட்டுவதை அறிவாரா என்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை மேற்படி பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் அனுமதியின்றி மீட்கப்பட்டுள்ள வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி அனுமதியற்ற காணி மீட்புகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

(v) மேற்படி முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) இதற்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை வெலிகம பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் வயற் காணிகளை மீட்பதற்கு சட்ட ரீதியாக அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மீட்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வயற் காணிகளை மீட்பதற்கு அனுமதி வழங்கியமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3824/ '13

14.

கௌரவ பி. ஹரிசன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுகாதார அமைச்சின் கீழுள்ள போதனா ஆஸ்பத்திரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் பணியாற்றும் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஆஸ்பத்திரிகளில் உள்ள நோயாளர்கள் சார்பில் துப்பரவேற்பாட்டு தொழிலாளர்கள் நிறைவேற்றுகின்ற கடமைப்பொறுப்பு யாதென்பதையும்;

(iv) ஒவ்வொரு போதனா ஆஸ்பத்திரியிலும் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர் களுக்காக கொடுப்பனவுகள் உட்பட சம்பளமாக வழங்கப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2012ஆம் ஆண்டில், ஒவ்வொரு போதனா ஆஸ்பத்திரியிலும் துப்பரவேற்பாட்டு நடவடிக்கைகளுக்காக தனியார் துறைக்கு செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி பணம் செலுத்தப்பட்டுள்ள தனியார் நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4092/ '13

15.

கௌரவ அனுர திஸாநாயக்க,— இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கை வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையினால், அதன் கீழ் பயிற்சி பெறும் மாணவர்களுக்காக 2013 ஆம் ஆண்டில் கொழும்பில் நடாத்தப்பட்ட செயலமர்வுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி செயலமர்வுகள் நடாத்தப்பட்ட திகதிகள் மற்றும் ஒவ்வொரு செயலமர்விலும் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) குறித்த செயலமர்வுகளின் குறிக்கோள்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி செயலமர்வுகளில் பங்குபற்றிய விரிவுரையாளர்கள் யாவர் என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு செயலமர்வுக்காகவும் போக்குவரத்து, உணவு, விரிவுரைக் கட்டணம் உட்பட மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவினம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— சிறப்புரிமை,— தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர் அவர்களால் 2014 மே மாதம் 7ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.212/ '14

1.

கௌரவ அசல ஜாகொடகே

கௌரவ (திருமதி) மாலனீ பொன்சேக்கா

கௌரவ ஜானக பண்டார

கௌரவ உதித் லொக்குபண்டார

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்

கௌரவ சாந்த பண்டார

கௌரவ ஜே. ஆர். பி. சூரியப்பெரும

கௌரவ நிமல் விஜேசிங்க

கௌரவ ஆர். துமிந்த சில்வா,— ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் இலங்கைக்கு எதிரான விசாரணை மேற்கொள்ளப்படக்கூடாது,— ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் இலங்கைக்கு எதிராக நடத்தப்படவுள்ள விசாரணை இலங்கையின் நல்லிணக்கச் செயற்பாட்டிற்கும் சமாதானத்திற்கும் பாதகமானதாக உள்ளதாலும் இலங்கையின் இறைமைக்கும் கண்ணியத்திற்கும் மேன்மைக்கும் சவாலாக உள்ளதாலும், குறிப்பிட்ட விசாரணை மேற்கொள்ளப்படக்கூடாது என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

* 2.

இலங்கை அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 3.

கைத்தொழில், வாணிப அமைச்சர்,— கம்பனிகள் சட்டம் மற்றும் சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளைகள்,— 2007 ஆம் ஆண்டில் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 477 மற்றும் 157 (5) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 527 ஆம் ஆம் பிரிவின் கீழும் 2005 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, சங்கங்கள் கட்டளைச் சட்டம் மீளத் (திருத்தப்பட்ட) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1891 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் (123 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவின் கீழும் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2013 திசெம்பர் மாதம் 18 ஆம் திகதிய 1841/8 இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையிலும் 2014 சனவரி மாதம் 27 ஆம் திகதிய 1847/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டதும் 2014.06.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 8.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஒகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

11.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

12.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

13.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.